பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

அன்பளிப்பு விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 6 சனிக்கிழமை (20-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 55

# கிழக்கு காடுகளில் ராணுவம் ஐந்து முனைகளில் நகர்வு!

## மட்டு. நகர் மூடப்பட்டது?

சாவகச்சேரி, ஜன. 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு நகரிலிருந்து மக்கள் வெளியே செல்லவும், நகருக்குள் வரவும் படையினர் தடை விதித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. (உ)

## மூன்று நாள்களாகியும் புலிகளை இன்னும் எதிர்கொள்ளவில்லை

சாவகச்சேரி, ஜனவரி 20

**மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை ''சூரிய ஒளிக்கற்றை'' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, காடுகளில் இறங்கி, ஐந்து முனைகளில் படை நகர்வை மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர், நடவடிக்கை ஆரம்பித்து மூன்று நாள்களாகியும் இன்னும் விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளவில்லை என்று அறிவிக்கப்படுகின்றது.**

பத்திரத்திலிருந்து பளுகாமம் ஊடாக கொக்கட்டிச்சோலைக்கு ஓர் அணியும்—

வலையிறவுப் பாலம் ஊடாக வவுணதீவு நோக்கி ஓர் அணியும்—

ஏறாவூர் புல்லுமலைத் தீவு ஊடாக ஓர் அணியும்—

செங்கலடி — பதுளை வீதி ஊடாக ஓர் அணியும்—

வட்ட வானில் இருந்து வாகரைக்கு ஓர் அணியுமாக ஐந்து அணிகள் காடுகளில் இறங்கியுள்ளன.

சுமார் இரண்டாயிரம் இராணுவக் கொமாண்டோக்களும் மற்றும் விசேட அதிரடிப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த நடவடிக்கையில் படையினருக்கு உதவியாக பலத்த ஷெல் தாக்குதல்களும், விமான மற்றும் ஹெலிக்கொப்டர் குண்டு வீச்சுகளும் மேற்கொள்ளப்படுவதாக 'புலிகளின் குரல்' அறிவித்தது.

### ஷெல்வீனால மூவர் காயம்

ஸ்ரீலங்காப் படையினரின் ஷெல் ஒன்று கல்குடாப் பகுதியில் விழுந்து வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

கணபதிப்பிள்ளை லட்சுமி (வயது 45), க. தேவகி(வயது 10), க. ரவீந்திரன்(வயது 19) ஆகியோரே காயமுற்றனர்.

கிழக்கில் புலிகளை அழிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என அரசு அறிவித்துள்ள போதும்—

மேற்படி இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து மூன்று நாள்களாகியும் புலிகளைப்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர்பற்று பகுதியில் மக்கள் இடம்பெயர்வு

கொழும்பு, ஜன. 20

கிழக்கு மாகாணத்தில் படையினர் ஆரம்பித்திருக்கும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து ஏறாவூர்ப்பற்று பிரதேச மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படை நடவடிக்கை இடம்பெறும் பகுதிகளில் மழை வெள்ளப் பாதிப்பு இருப்பதால் இடம்பெயரும் மக்கள் மேலும் அவலப்படவேண்டியிருக்கும் என நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி குறிப்பிட்டார்.

கிழக்கில் படை நடவடிக்கை தீவிரமடைய அங்கு அகதிகள் பிரச்சினையும் தீவிரமடையும் என நிவாரணப் பணியாளர்கள் அஞ்சுவதாக **வெரித்தாஸ்** வானொலி தெரிவித்தது. (உ-6-7)

## யாழ்ப்பாணம் சென்று திரும்பினார் ஆயர்

சாவகச்சேரி, ஜன. 20

யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தர நாயகம் யாழ்ப்பாணம் சென்று தமது பங்கு மக்களின் குறைகளை கேட்டறிந்தார் என கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

கொழும்பில் இருந்து விமான மூலம் பலாலிக்கு சென்ற ஆயரும் அவரது செயலாளரும் அங்கிருந்து யாழ். ஆயர் இல்லத்துக்குச் சென்றனர்.

கிறிஸ்தவ குருமார் அடங்கிய மற்றொரு குழுவும் அங்கு கடந்த வாரம் சென்றதாகக் கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது. (வ்-3)

## அடுத்த கட்ட ராணுவ நடவடிக்கை குடாநாட்டில் மார்ச் வரை இல்லை!

### பி. பி. ஸி செய்தியாளர் ஊகம்

யாழ். குடாநாட்டின் எஞ்சிய பகுதிகள் மீதான — 'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் அடுத்த கட்டத்தை — இயன்ற விரைவில் ஆரம்பிக்க ஸ்ரீலங்கா இராணுவம் முயற்சித்தாலும் கூட மார்ச் மாதம் வரை அதைத் தொடங்குவதற்கு சாத்தியக் கூறுகள் குறைவு.

கொழும்புக்கான பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆனி இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கிலும் வடக்கிலும் ஒரே நேரத்தில் தாக்குதலை நடத்தும் ஆற்றல் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு இல்லை.

அதிரடிப்படைச் சிப்பாய்கள், சிறப்புப் படைச் சிப்பாய்கள் ஆகியோரைக் கொண்ட — ஒரு பட்டாலியன் அளவுடைய — ''இன்டிபென்டன் பிரிகேட்' இராணுவப் பிரிவை கிழக்குக்கு ஸ்ரீலங்கா இராணுவம் அனுப்பியிருப்பதைப் பார்க்கும் போது, யாழ். குடாநாட்டில் அடுத்த கட்ட தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான ஆற்றல் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு இல்லை என்பது புலனாகுகின்றது.

குடாநாட்டின் வடமராட்சிப் பகுதி இதற்கிடையில் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் இப்போது காணப்படும் நிலைமையைப் பார்த்தால் — இயன்ற விரைவில் என்று கூறினால் கூட — மார்ச் மாதம் வரை சூரியப் பிரகாச இராணுவ நடவடிக்கையின் அடுத்த கட்டத்தை ஆரம்பிக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பது புலனாகுகின்றது — என்றார். (உ)

## யாழ். பிரதம தபாலகத்தை யாழ்ப்பாணத்தில் இயங்க வைக்க முயற்சி

சாவகச்சேரி, ஜன. 20

தற்போது சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் இயங்கி வரும் யாழ். பிரதம தபாலகத்தை யாழ்ப்பாணத்தில் இயங்க வைப்பதற்கு அரசு முயன்றுவருகிறது.

இது குறித்துஆராய்வதற்கு வடமாகாண பிரதித் தபால் அத்தியட்சகர் திரு. மாணிக்கவாசகரையும் சில பொறுப்பதிகாரிகளையும் உடனடியாகக்கொழும்புக்கு வருமாறு பணித்து அஞ்சல்மா அதிபர் நாயகம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனார்.

இது தொடர்பாக சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலத்தில் இயங்கும் யாழ். பிரதம தபாலகத்தில் நேற்று முற்பகல் அவசர கூட்டமொன்று நடைபெற்றது.

பாதுகாப்பு கெடுபிடிகளால் கொழும்புக்கு வரமுடியாது என்றும் —

அவ்வாறாயின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் — அஞ்சல்மா அதிபர் நாயகத்துக்கு அறிவிப்பது என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (அ-7)

## புலிகளைத் தோற்கடிக்கலாம் என்ற புது நம்பிக்கை நீடித்து இருக்காது

### ராணுவம் குறித்து விமர்சனம்

யாழ்ப்பாணத்தைப் பிடித்த போது சிங்கள மக்களிடையே காணப்பட்ட பேரார்வமும் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்ற புதுநம்பிக்கையும் நீடித்து இருக்காது என்பது புலனாகின்றது.

— பி. பி. ஸியின் கொழும்புச்செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தமது செய்திக் கண்ணோட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இராணுவம் தனது படை பலத்தைப் பெருக்குவதற்காக புதிதாகத் துருப்புகளைச் சேர்த்துக் கொண்டாலும் கூட—

தனது உத்திகளை [illegible] மாற்றிக் கொள்ள விட்டால் வடக்கிலும், கிழக்கிலும் ஒரே நேரத்தில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுப் படைகளால் இயலாது என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதுவே உண்மை நிலை என்றால் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்று சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கை நீடித்து இருக்காது — என்றார். (உ)

## பாடசாலை, ஆஸ்பத்திரி இயங்க வைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 20

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை மீண்டும் திறந்து வைக்கவும் வலிகாமத்தில் உள்ள பாடசாலைகளை மீண்டும் திறக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையை இயங்க வைக்க உதவுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசாங்க மருத்துவ அதிகாரிகளுக்கு தனிப்பட்ட முறையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலிகாமம் பகுதி பாடசாலை ஆசிரியர்களை யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகம் அளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA SRI LANKA·

## FACULTY OF SCIENCE

The unit numbers and title of the courses for the Third and the Special Degree Examinations, 1994 are given below to facilitate the students. Students are advised to check their subject for which they are appearing.

The examinations will be commenced on 19th February, 1996.

### THIRD EXAMINATION IN SCIENCE 1994

Unit No. Title

Botany

- BTG *31* Plant physiology and Bio chemistry-I
- BTG *32* Plant physiology and Bio chemistry-II
- BG *31* Plant physiology and Bio chemistry (old syllabus)

Chemistry

- CHG *32* Analytical and Industrial chemistry
- CHG *33* Organic chemistry III
- CG *36* Inorganic chemistry (old syllabus)
- CG *37* Organic chemistry (old syllabus)

Computer Science

- CSG *33* Introduction to Computer graphies
- CSG *34* System software

Mathematics & Statistics

- MPG *32* Group theory
- MPG *33* Complex analysis
- PMG *31* Complex analysis & Topology (old syllabus)
- MAG *31* Classical mechanics
- MAG *33* Modelling
- AMG *31* Fluid mechanics & Classical mechanics (old syllabus)
- MSG *32* Sampling theory
- STG *32* Applied statistics (old syllabus)

Physics

- PHG *31* Acoustics & Optics
- PHG *33* Quantum physics & Physics of atoms, nuclei and particles
- PG *23* Waves & Vibrations, Properties of fluids, thermodynamics & Thermal radiation. (old syllabus, 2nd & 3rd year Repeaters only)
- PG *34* Modern physics (Old syllabus, 2nd & 3rd year Repeaters only)

Zoology

- ZOG *33* Fisheries biology
- ZOG *34* Environmental biology
- ZG *32* Experimental zoology (old syllabus)

### THIRD EXAMINATION IN SCIENCE (SPECIAL DEGREE UNITS), 1994

Chemistry

- CHS *31* Physical methods in chemisty
- CHS *32* Advanced organic chemistry I

Computer Science

- CSS *41* Numerical Solution of differential equations
- CSS *34* Data base Design
- CSS *42* Expert systems
- CSS *44* Compiler design

Mathematics & Statistics

- MMS *31* General Topology
- MMS *33* Electromagnetic theory & Relativity
- MSS *33* Applied Statistics
- MSS *32* Stochastics processes & Time Series

Physics

- PHS *31* Classical Mechanics & Relativity
- PHS *32* Quantum Mechanics
- PHS *33* Electronics & Computing

Zoology

- ZOS *05* Fisheries biology
- ZOS *06* Aquaculture
- ZOS *07* Industrial Entomology

### SPFCIAL DEGREE EXAMINATION IN SCIENCE, 1994

Chemistry

- CHS *41* Advanced physical chemistry
- CHS *42* Advanced inorganic chemistry
- CHS *43* Advanced Organic chemistry II

Computer Science

- CSS *34* Data Base Design
- CSS *41* Numerical solution of Differentlal Equations
- CSS *42* Expert system
- CSS *43* Operating systems
- CSS *44* Compiler design
- CSS *45* Parallel computing
- CSS *48* Computer network

Mathematics & Statistics

- MMS *42* Ring theory
- MMS *33* Electromagnetic theory & Relativity
- MMS *43* Real analysis
- MMS *44* Functional analysis
- MSS *41* Advanced probability theory
- MSS *42* Measure theory
- MSS *32* Stochastic processes & Time series

Physics

- PHS *41* Statistical physics & Thermodynamics
- PHS *42* Electromagnetism
- PHS *43* Optical physics
- PHS *44* Solid state physics
- PHS *45* Nuclear physics
- PHS *46* Particle physics
- PHS *47* Quantum mechanics II

Zoology

- ZOS *05* Fisheries biology
- ZOS *06* Aquaculture
- ZOS *07* Industrial Entomology
- ZOS *09* Insect systematics & Physiology
- ZOS *10* Endocrinology
- ZOS *11* Essay

Deputy Registrar / Exams & Admissions.
For Registrar

17. 01. 1996 (C/3163)


# உடன் சந்திக்கவும்

சிங்கம் பார்மஸி, யாழ்ப்பாணம், மற்றா பேணிச்சர், கஸ்தூரியார் வீதி, நுரைபல் பொருள் விற்பனை நிலையம், கஸ்தூரியார் வீதி. பவானந்தன் பவித்திரா பேணிச்சர், கஸ்தூரியார் வீதி, அ.குமார், அருச்சுனா வீதி, குஞ்சன் சில்வர்லைன்ஸ், K. K. S வீதி.

உடன் வரவும்

**றாஜு ஸ்ரோர்ஸ் (யாழ்)**

தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி சந்தி.

(39978)


# சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

*க. பொ. த. உயர்தரப் பரீட்சை*

**மீளாய்வு விண்ணப்பப் படிவங்களை**

இல. 1, சேச் றோட், சாவகச்சேரி என்னும் விலாசத்தில் 23 - 01 - 1996 க்கு முன்னதாக சமர்ப்பிக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
செல்வி L.P. தேவா
(ஆசிரியர்)

(39980)


# சிக்கனம்

**மில்க்வைற்**

**அரைக்கட்டி சவர்க்காரம்**

எங்கும் விற்பனையாகிறது

**கட்டி ஒன்று ரூபா 10/**

50 கட்டி கொண்ட பக்கெற் ரூபா 450/- மட்டுமே

மில்க்வைற் நிறுவனம்,
மீசாலை.

(40209)


தம்பசிட்டி

# பண்டாரி அம்மன் கோவில்

# அபிராமிபட்டர் விழா

*இன்று சனிக்கிழமை மாலை 6. மணி*

சிறப்பு நிகழ்ச்சி
''நிலவு காட்டிய நிலாயதாக்ஷி''
கலாவினோதன்
கே. என். கணபதிப்பிள்ளை
(சின்னமணி)

சிறப்புப் பாட்டு:
''அபிராமி அந்தாதி''
இயலிசைவாரிதி
கவிஞர் ந. வீரமணிஐயர்

(சி/3172)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் மு. சு. கதிர்காமத்தம்பி

எமது பாடசாலை கல்வியூக்கச் செயற்பாட்டுக்கு உதவி புரிந்த மேலைப் புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி அவர்களின் அகாலமரணம் அறிந்து ஆழ்ந்த கவலையடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம். (39977)

### மரண அறிவித்தல்

**திருமதி ஆச்சிப்பிள்ளை சங்கரப்பிள்ளை**

இருபாலையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், நாவற்குழியில் தற்போது வசித்தவருமான திருமதி ஆச்சிப்பிள்ளை சங்கரப்பிள்ளை 18 - 01- 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், கெங்காதரன், கெங்காதேவி, கெங்கேஸ்வரி (கிளிநொச்சி), தர்மலிங்கம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாக்கியம், உலகநாதன், பாலசுப்பிரமணியம், இராசலெட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை, சண்முகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 - 01 - 96 வெள்ளிக்கிழமை நாவற்குழியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மக்கள், மருமக்கள்**

தற்போதைய முகவரி:
அ. உலகநாதன்,
மே/பா, செ. அப்பாத்துரை,
''குகனகம்''
நாவற்குழி,
கைதடி. (40208)

### யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

*யாழ். பல்கலைக்கழக மூதவை/பேரவை கூட்டங்கள்*

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1996- 01- 23 முற்பகல் 10-30 மணிக்கு நடைபெறவிருந்த யாழ். பல்கலைக்கழக மூதவைக் கூட்டமும், 1996 -01 - 24 முற்பகல் 10–30 மணிக்கு நடைபெறவிருந்த பேரவைக் கூட்டமும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். யாழ். பல்கலைக்கழக மூதவை, பேரவை அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
(சி-3173)

### யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

இசைக் கலைமாணி/ இசைக் கலைமணி

புதிய அனுமதிகள் 1994 / 95

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பப் பிரதியுடனும் தேசிய அடையாள அட்டை, பிறப்பு, கல்விச் சான்றிதழ்களுடனும் **25 - 01 - 1996, 26 — 01 — 1996, 27 - 01 - 1996** ஆம் திகதிகளில் காலை 9. 00 — 12. 00 மணி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக உப-அலுவலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
19 - 01 - 1996
(சி/3171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் நிறுத்தல் அளவைகளில் மோசடி

மந்திகை, ஜன, 20

பாவனையாளர்களுக்கு பொருள்களை விநியோகிக்கும் போது சில ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மோசடி செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல நோக்குக் கூட்டுவுச் சங்கங்கள் பலவும் பாவனையாளர் நலனில் அக்கறையுடன் செயலாற்றி வந்தாலும் ஒரு சில சங்கங்கள் அதற்கு மாறாகச் செயற்படுகின்றன.

பொருள்களை நிறுக்கும் போதே இந்த மோசடிகள் இடப்பெற்று வருகின்றனவாம்.

யாழ். செயலக விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகரும், நிறுவை அளவைப் பரிசோதகர்களும் ப. நோ. கூ. சங்கக் கிளைகளுக்கு மேற்கொண்ட திடீர் விஜயத்தின் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நிறுக்கும் போது அளவில் மோசடி செய்வது மாத்திரமன்றி படிகளைக் குறைத்துப் போட்டு நிறுக்கும் மோசடிகளும் இடம்பெறுகின்றனவாம்.

திடீர்ப் பரிசோதனையின் போது அரிசி 35 கிலோவுக்கு 1 கிலோ குறைவாகவும் —

மாவு 28 கிலோவுக்கு 1 கிலோ குறைவாகவும்—

சீனி 14 கிலோவுக்கு 400 கிறாம் குறைவாகவும்—

மைசூர்ப் பருப்பு 2 கிலோ 600 கிறாமுக்கு 150 கிறாம் குறைவாகவும் — நிறுக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த மோசடி வடமராட்சி வடக்குப் பகுதியில் உள்ள ப. நோ. கூ. சங்கக் கிளை ஒன்றில் நடைபெற்றதாகத் தெரிவித்தனர்.

இதே போன்று இன்னும் சில கிளைகளில் மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

ஆகவே மக்கள் பொருள்களை கொள்வனவு செய்யும் போது நிறுத்தல் அளவையைக் கவனிப்பது மாத்திரமன்றி போடப்படும் படிகளின் அளவையும் கவனித்துப் பொருள்களை கொள்வனவு செய்யும்படி பரிசோதகர்கள் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(இ-15)

# செஞ்சிலுவை பயிற்சிநெறி: பரீட்சை விரைவில் நடக்கும்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் நடைபெற்ற தட்டச்சு, சுருக்கெழுத்து (தமிழ், ஆங்கிலம்) உதவித்தாதி. ஆரம்ப சுகாதார கவனிப்பாளர், மருந்தாளர் பயிற்சி நெறிகளில் பயின்ற மாணவர்களுக்கான பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளன.

பயிற்சி நெறியைப் பயின்ற மாணவர்கள் தமது பெயரையும், பயின்ற பயிற்சி நெறியின் பெயரையும், வடமராட்சியில் இருப்போர் பருத்தித்துறை வி. எம். வீதியில் உள்ள தலைமைக் காரியாலயத்திலும்—

தென்மராட்சியில் இருப்போர் மீசாலை உப அலுவலகத்திலும் — உடனடியாகப் பதிவு செய்யும்படி செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-15)

# தமிழரின் உரிமைகளை பாதுகாக்க அரசு நேர்மையாக செயற்படவில்லை

## அரசியல் விமர்சகர் கருத்து

''தற்போதைய அரசு தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கோ, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ எவ்வித நேர்மையான முயற்சியையும் மேற்கொள்ள வில்லை''

அரசியல் விமர்சகரான லீனஸ் ஜயதிலகா பி. பி. ஸி. க்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய அரசு வலது சாரிகளின் கைப்பொம்மையாகிவிட்டது.

தமிழ்மக்கள் இந்த அரசின் மீது எவ்வித நம்பிக்கையும் கொண்டிருக்கவில்லை.

அரசு முதலில் சமர்ப்பித்த யோசனைகளில் காணப்பட்ட பிராந்தியங்களின் இணைப்புக் குறித்து இன்று சட்ட வரைவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பிராந்தியங்கள் தொடர்பாக மத்திய அரசுக்கு பூரண அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

முன்னைய யோசனைகள் பெருமளவில் மாற்றப்பட்டு, இன வாதிகளின் விருப்பப்படி சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ 3-6)

# அகதிச் சிறுவர்களுக்காக பாடசாலைக் கட்டடம்

## ஆசிக்குளத்தில் திறந்து வைப்பு

வவுனியா ஆசிக்குளம் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் அசதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட புதிய பாடசாலை கட்டடம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அகதிச் சிறுவர்களின் கல்விக்காக இந்தக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஐந்தரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை ஐ நா. நிறுவன வதிவிடப் பிரதிநிதி பீற்றர் மேயர் திறந்து வைத்தார்.

வவுனியா கோமரசன் குளம் மகாவித்தியாலயத்திலும் இது போன்ற கட்டடத்தை ஐ. நா. நிறுவனம் அமைத்து முடித்துள்ளது.

(இ-7)

# அரசின் தீர்வு யோசனைகளுக்கு மாற்று யோசனை சாத்தியமில்லை

## தமிழருக்கு அதி உச்ச அதிகாரம் என்கிறார் பீரிஸ்

மணிலா. ஜன 20

ஸ்ரீலங்காவில், பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சட்ட வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு, மாற்று யோசனைகள் தெரிவிப்பதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே இருப்பதாக அவதானிகள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சட்ட வரைவு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

தற்போது வெளியிடப்பட்டுள்ள சட்ட வரைவில் இடம் பெற்றுள்ள யோசனைகள், தமிழர்களுக்கு அதி உச்ச உரிமைகளை வழங்கி இருப்பதாக அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார் என்றும் —

இந்த யோசனைகளில் மாற்றம் கொண்டு வந்தால் பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் சீற்றம் அடைவர் என்று அவதானிகள் சுட்டிக் காட்டி உள்ளனர் என்றும் வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது.

(இ-6)

# வவுனியாவில் தங்கியுள்ளோரை 3 நாள்களுக்குள் அனுப்ப நடவடிக்கை

கொழும்பு, ஜன. 20

வடக்கில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு செல்வதற்காக வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை ஆகக்குறைந்தது 3 நாள்களுக்குள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

வடக்கில் இருந்து வரும் பயணிகளை ஒரே நாளில் தெற்கே அனுப்ப ஏற்பாடு செய்வதாக யாழ்ப்பாண புனர்வாழ்வு செயலணிக்குழு தலைவரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா கடந்த வாரம் தமிழ்க் கட்சிகளிடம் தெரிவித்திருந்தார்.

(இ-3)

# சடலம் அடையாளம் காணப்பட்டது

மந்திகை, ஜன. 20

கைதடி பாலத்தடியில் நேற்று முன்தினம் அநாதரவானநிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இனம் தெரியாத சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

வியாபாரிமூலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி [வயது66] என்பவரே இறந்தவர் ஆவார்.

இவர் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்று தெரிவிக்கப்பட்டது.

29 வருடகாலமாக தனிக்குடித்தனம் நடத்திவந்த இவரின் மரணத்துக்கான காரணம் இன்னும் மர்மமாகவே உள்ளதாம்.

[இ 15]

# மஹா யாகம்

நாட்டின் நன்மைக்காகவும் மக்களின் சுபீட்சம், நல்வாழ்வு வேண்டியும் அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் மஹா யாகம் ஒன்று நடைபெறுகின்றது.

17ஆம் திகதி ஆரம்பித்த இந்த யாகம் இன்று 20ஆம் திகதி வரை நடைபெறும்.

# தென்மராட்சிப் பகுதியில் வயிற்றோட்ட நோய் கட்டுப்பாட்டில் வருகிறது

தென்மராட்சிப் பகுதியில் வயிற்றோட்ட நோய் ஓரளவு கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சில தினங்களுக்கு முன்னர் தினமும் 40க்கு மேற்பட்டோர் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்

ஆனால் கடந்த வாரத்தில் தினமும் நான்கு பேரே பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# போட்டியிட விருப்பம்

மொஸ்கோ, ஜன. 20

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்ற எண்ணம் தனது மனத்தில் அடிக்கடி தோன்றுவதாக சோவியத் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி மிக்கையில் கோர்பச்சோவ், பிரான்ஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். (உ)

# ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் வீச்சு!

தென்மராட்சி, ஜன. 20

நேற்று முன்தினம் இரவு 8.00 மணிக்கு ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பளையை அண்டிய தென்னந் தோட்டங்களிலும் பற்றைக் காணிகளிலும் வீழ்ந்து வெடித்தன. பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

(உ-117)

# சிங்களவரின் ஆதரவைப் பெறவே அரசு யுத்தத்தை நடத்துகிறது

## 'மேர்ஜ்' பிரமுகர் கருத்து

கொழும்பு, ஜன. 20

எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் பொதுத்தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை இழந்துள்ள நிலையில் சிங்கள மக்களின் வாக்குகளைத் திரட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதனால் தான் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சமாதானத்துக்கும், நீதிக்குமான 'மேர்ஜ்' அமைப்பின் பிரமுகர் திரு. எஸ். மனோரஞ்சன் கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை குறித்து பி.பி.ஸி. யின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் ஒருபுறமும், அரசியல் தீர்வு இன்னொரு புறமுமாக அரசு தொடர்ச்சியாக இரட்டை வேடத்தில் செயலாற்றிவருகிறது.

''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து முதலில் அரசு தீர்வு யோசனைகளை வெளியிட்டிருந்தது.

ஆனால் அந்த நேரத்தில் அதனை உள்வாங்கிக்கொள்ளும் நிலையில் தமிழ்மக்கள் இருக்கவில்லை.

அதேபோன்று தற்போது அதிகாரப்பரவலாக்கல் சட்ட வரைவை அரசு வெளியிட்டுள்ள கையோடு கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இந்த நிலைமைகளில் சில வேளை அதிகாரப் பரவலாக்கல் திட்ட யோசனைகள் நாடாளுமன்றில் அங்கீகரிக்கப்பட்டு, சிங்கள மக்களின் ஆதரவு கிடைப்பினும்; இது வரை இத்தகைய யோசனைகளின் மூலம் தீர்வை எதிர்பார்த்திருந்த தமிழ் மக்கள் அதனை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை எதிர்காலத்தில் ஏற்படாது என்றே எண்ணத் தோன்றுகிறது.

மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறின் அரச பிரசாரத்துக்கு தேவையானதெல்லாம் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் மட்டுமே.

பொதுத் தேர்தலை நடத்துவதாயினும் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற உதவப்போவதும் இராணுவ வெற்றிகளே.

இத்தகைய இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ் மக்களின் வாக்குகள் மீண்டும் அரசுக்குக் கிடைக்கப் போவதில்லை. சிங்கள மக்களின் ஆதரவினாலேயே அரசை அமைக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனை

நுணாவில் கிழக்கில் இரு பது பரப்பு வயல் நிலமும், கல்வயல் துர்க்கை அம்மன் கோவிலடியில் பத்தரை பரப்பு தென்னங்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு. ஜே. எஸ். ரீ. புத்தகக்கடை, கண்டி வீதி (பழைய நீதிமன்றம் முன்பாக), சாவகச்சேரி. (40202)

### தேவை

எமது வாணிப நிலையத்திற்கு பீடி, அப்பளம், ஊதுபத்தி, பற்பொடி தயாரிக்கக் கூடியவர்களும், பன்ன வேலை தெரிந்தவர்களும் தேவை. தங்குமிட வசதி உண்டு. விண்ணப்பிக்கவும். இல. 519, மே/பா உதயன், சரசாலை. (40195)

### போத்தல் தேவை

ஹொர்லிக்ஸ், வீவா, ஜாம் போத்தல்கள் உள்ளவர்கள் அவற்றை கிரியோன் கூல் பார், ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ் (சாவகச்சேரி), வேலவன் ஸ்ரோர்ஸ், செல்வராஜா ஸ்ரோர்ஸ் (பருத்தித்துறை), சுபாஸ் பேக்கவுஸ், ரேஸ்ற் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட் (நெல்லியடி) இல் ஒப்படைக்கவும். பணத்தையும் பெற்றுக்கொள்ளவும். (சி-3090)

### வீடு தேவை

பருத்தித்துறையில் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். சிவகுமரன் பிடவை மாளிகை, பருத்தித்துறை. (40081)

### ஜாதகக் குறிப்பு

ஜாதகக் குறிப்புப் புத்தகம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சோதி அச்சகம், கச்சாய் வீதி (மக்கள் கடை அருகில்), சாவகச்சேரி. (39972)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

அச்சுவேலியைச் சேர்ந்த தங்கவேல் தயாளினி பல்கலைக்கழக மாணவியினால் தவறவிடப்பட்ட ஆவணங்களை ஆசீர்வாதம் பொத்தக சாலை, சாவகச்சேரியில் பெற்றுக்கொள்ளவும் (39974)

### தவறிவிட்டது

செல்வராஜா மேரிஸ் டெலாவின் அடையாள அட்டை இல. 747601364V மிருசுவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மிருசுவில் உபதபாற்கந்தோரில் அல்லது திருவள்ளுவர் களஞ்சியம், கொடிகாமத்தில் ஒப்படைத்து உதவவும் நன்றி. (40085)

### SPOKEN ENGLISH

ஆசிரியர் Britto அவர்களின் வகுப்புக்கள் ஞாயிறு காலை 10 மணிக்கு (21 - 1 - 96) ஆரம்பமாகும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஆசிரியர் Britto, கோவிற் சந்தை, கரவெட்டி. (40084)

## ஆங்கில மருந்து வணிகர் மன்ற கலந்துரையாடல்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை 21 ஆம் திகதி முற்பகல் 10,30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களையும் —

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து மருந்தகங்களை இயக்காதவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# வடமராட்சி கிழக்கில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம்

மந்திகை, ஜன. 20

வடமராட்சி கிழக்கில் மீண்டும் மலேரியா நோய் ஏற்படும் அபாயம் தோன்றி உள்ளது.

மலேரியாவின் தாக்கம் கடந்த இரண்டு மாதங்களாக அங்கு குறைந்திருந்த போதும், தற்போது பெய்துள்ள மழை காரணமாக நுளம்பு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும்

நுளம்புகளை அழிக்க, வேண்டிய மலத்தியோன் வடபகுதியில் கையிருப்பில் இல்லாததால் நுளம்பின் பெருக்கத்தைத் தடுக்கவோ அழிக்கவோ முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் –

இதனால் மலேரியா மீண்டும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாவும்— வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று மலேரியா ஒழிப்புப் பிரிவு வெளிக்கள உத்தியோகத்தரான வே. உமாபதி சிவம் தெரிவித்தார். (இ-15)

## மலசல கூடம் கட்டிக்கொடுக்க நடவடிக்கை

சாவகச்சேரி, ஜன. 20

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு, யாழ். மாநகரசபையின் குடிதண்ணீர் மற்றும் சூழல் சுகாதாரச் செயலணிப் பிரிவு, மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கும்.

இடம் பெயர்ந்து ஒரே இடத்தில் 30 பேர்களுக்கு மேல் தங்கியுள்ளவர்கள், யாழ். மாநகர சபையுடன் தொடர்பு கொள்ளுமிடத்து தண்ணீர் வசதி பெறக்கூடியதாக இருந்தால் யாழ். மாநகரசபையின் மேற்படி பிரிவு மலசல கூடம் ஒன்றை அமைத்துக் கொடுக்கும் என்று யாழ். மாநகர சபையின் மராமத்துப் பொறியியலாளர் திரு. ராமதாஸ் தெரிவித்தார். (இ-7)

# தீர்வு யோசனையை கூட்டணி ஆராயும்

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் அடங்கிய சட்ட வரைவைப் பரிசீலிப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு நாளை 21 ஆம் திகதி கொழும்பில் கூடவிருக்கிறது.

இந்த சட்ட வரைவுக்கு ஆதரவாக தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் ஏற்கனவே கருத்துக்களை வெளியிட்டிருப்பது தெரிந்ததே. (இ-3)

## குருத்துவகல்லூரி உருத்திரபுரத்தில்

யாழ்ப்பாணத்தில் இயங்கிய புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அடுத்த வாரம் முதல் உருத்திரபுரத்தில் இயங்கவிருக்கிறது.

கொழும்புத் துறையில் இயங்கிவந்த இந்தக் கல்லூரி கடந்த இரு மாதங்களாக செயற்படாமல் இருந்தது.

இந்தக் கல்லூரியின் சர்வ தேசப் பரீட்சை ஜூலை மாதம் நடைபெறவிருப்பதால் கல்லூரி அடுத்த வாரத்தில் இயக்கவிருப்பதாக கல்லூரியின் அதிபர் வண. எஸ். ஜே. இம்மானுவேல் தெரிவித்தார். (இ-3)

## கோயிலில் உண்டியல் திருட்டு

மந்திகை, ஜன. 20

நேற்று முன்தினம் இரவு கரணவாய் வடக்கு, ஸ்ரீமுத்துமாரி அம்மன் (நாச்சிமார்) ஆலயத்தில் இருந்து உண்டியல் திருடப்பட்டுள்ளது.

திருடப்பட்ட உண்டியல், வெறுமையாக, மறுநாள் காலை கோவிலை அண்டிய பகுதியில் வீசப்பட்டிருந்தது.

பணத்தை எடுத்து விட்டு உண்டியலை வீதியில்விட்டுச் சென்றுள்ளனர்.

இதற்கு முன்பும் உண்டில் திருடப்பட்டசம்பவம் இந்த ஆலயத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-15)

## உடன் தொடர்பு கொள்ளவும்

ஒய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், நல்லை ஆதீன மனேஜரும் ஆகிய

**S. T. நடராஜன்** அவர்களை

அவரது மகன் **ந. சுந்தரநடராஜன்**

தேடுகின்றார். எங்கிருந்தாலும் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்;

திரு. ந. சுந்தரநடராஜன்,
மே/பா வே. சபாரத்தினம் (விதானையார்),
பழைய ஸ்ரேசனடி,
மீசாலை மேற்கு,
மீசாலை.
அல்லது
76, குமரபுரம்,
பரந்தன்.

(39976)

இலங்கை ஆசிரியர் சங்கம்
(ப. இ. 984)
யாழ். மாவட்டக் கிளை
வட மாகாண ஆசிரியர் சங்கம்

## நிர்வாக சபைக் கூட்டம்

தலைமை :- தி. தர்மலிங்கம்
(யாழ். கிளைத் தலைவர்)
காலம் :- 22- 1- 96 திங்கட்கிழமை
இடம்: மட்டுவில் ம. வி.
நேரம்:- மு. ப. 10 மணி

அங்கத்தவர்களின் ஒன்று கூடலும், கலந்துரையாடலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும். தவறாது சமூகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தி. தேவராஜா,
செயலாளர்

வைரவ கோயிலடி,
கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி.
19 1-1996.

(சி-2942)

உ
சிவமயம்

## திருமண விஞ்ஞாபனம்

அன்புடையீர்;

நிகழும் மங்களகரமான யுவ வருஷம் தைத்திங்கள் **7** ஆம் நாள் (21-01-96) ஞாயிற்றுக்கிழமை காலை **7-45** மணி முதல் **9-45** வரையுள்ள பிரதமை திதி அமிர்தயோகம் திருவோண நட்சத்திரம் கூடிய கும்ப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

காங்கேசன்துறை
**விசாகப்பெருமாள் சடாச்சரம்**
அவர்களின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஞானச்சந்திரன்**
அவர்களுக்கும்

வல்வெட்டித்துறை
**இராமநாதபிள்ளை குழந்தைவேல்**
அவர்களின் ஏக புத்திரி
திருநிறை செல்வி
**கோதை**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு திருமணம் நடத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றதென்பதை நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

வைபவ இடம்: **வல்வை சிவன் கோவில்**

★ தங்கள் நல்லாசியை நாடும் ★

**திருமதி சிவசுந்தரி விஸ்வரஞ்சன்**
தற்போதைய முகவரி:
மே/பா. ஜெயராசா
ஒடக்கரை,
பருத்தித்துறை.

**இராமநாதபிள்ளை குழந்தைவேல்**
குடும்பம்
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(40086)

நெஞ்சை விட்டு நீங்காத

## 31-ம் நாள் நினைவலைகள்

அமரர் திருமதி
**அன்னம்மா சூசைப்பிள்ளை**
(Authorised Dealer, - J. M. P. C. S. Ltd.)
இறையரசில் 21- 12- 1995

ஆண்டுகள் பல வாழ்ந்து, எமது நல்வாழ்விற்காக தனது வாழ் நாள்களை அர்ப்பணித்து தெய்வீக உலகில் சங்கமமாகிய எமது அன்புத் தெய்வத்தின் நீங்காத நினைவுகள் என்றும் எம் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்.

இரங்கற் திருப்பலி மட்டுவில் புனித லூர்து அன்னை ஆலயத்தில் இன்று 20-1-96 காலை 7 மணிக்கு நடைபெறும்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
இல. 4, கோவில் வீதி
ஒழுங்கை,
சண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

S. F. சேவியர்
மெய்கண்டான் வீதி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
(40205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒற்றையாட்சி ஒழியாது

நாட்டின் ஒற்றையாட்சி அந்தஸ்துக்குப் பாதிப்பை உண்டுபண்ணும் செய்திகளை வெளியிட வேண்டாம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கொழும்புப் பத்திரிகைகளைக் கேட்டுள்ளார்.

ஒற்றையாட்சி முறைக்கு எதிராக செய்திகள் கட்டுரைகளை வெளியிடுவது தேசாபிமானமற்ற, பொறுப்புணர்ச்சி இல்லாத நடவடிக்கை என்றும் அவர் கண்டித்துள்ளார்.

ஒற்றையாட்சிக்கு விரோதமான கருத்துக்களைப் பிரசுரிப்பது அரசாங்கம் வழங்கியுள்ள பத்திரிகைச் சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதாகும் என்றும் அனுருத்த கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் கருத்துச் சுதந்திரம்— பத்திரிகைச் சுதந்திரம்— மிதித்து, நசுக்கப்பட்டிருந்ததாக ஓலமிட்டவர்கள் இன்றைய அமைச்சர்கள்.

தாம் ஆட்சிக்கு வந்தால் முழுமையான பத்திரிகைச் சுதந்திரமும், இரகசிய நடவடிக்கைகள் அற்ற பகிரங்கத்தனமும் (Transparency) பேணப்படும் என்று உறுதி அளித்தவர்கள் இன்றைய ஆளுங்கட்சியினர்.

ஆனால், பத்திரிகைச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும், தகவல் அறியும் சுதந்திரத்தையும் பறித்தெடுப்பதில் முந்திய அரசையும் விட மோசமானவர்கள் தாமே என்று இப்போது நிரூபித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணப் போர் நடைபெற்ற வேளை அரசாங்கம் பத்திரிகைகளின் குரல் வளையை நசுக்கி நடைமுறைப்படுத்திய செய்தித் தணிக்கை உலகப் 'பிரசித்தி' பெற்றது.

அது ஒரு புறமிருக்கட்டும்— நாட்டினை மிகவும் மோசமான நிலைக்குள் தள்ளிவிட்டிருக்கும் இனப் பூசலை நீக்குவதற்கு ஒற்றையாட்சி முறையை மாற்றுவதே உகந்த வழி என்றும் —

அதனை மாற்றுவதற்குத் தமது கட்சி செயற்படும் என்றும் — ஒரு கருத்தை பொது மக்கள் ஐக்கிய முன்னணியினர், பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது மறைமுகமாக உருவாக்கியிருந்தனர்.

ஐக்கிய இலங்கை என்பது வேறு; ஒற்றையாட்சி என்பது வேறு. சமஷ்டி — கூட்டாட்சி — முறையின் கீழும் ஐக்கிய இலங்கையைப் பேணலாம் என்றெல்லாம் இவர்களின் அணியைச் சேர்ந்தவர்கள் கூறிவந்தனர்.

ஆனால் இப்போது ஒற்றையாட்சிக்கு எதிராகக் கருத்து வெளியிடுவது தேசாபிமான மற்ற செயல் என்று கண்டிக்கத் தொடங்யுள்ளனர்.

சிங்கள அரசியல் தலைவர்கள் எவருமே, ஒற்றையாட்சி முறையை கைவிட்டு, தமிழர்களுக்கு ஆளும் உரிமையை வழங்குவதற்கு இன்னமும் தயாரில்லை என்பதே இதன் வெளிப்பாடாகும்.

அதிகாரப் பரவல் என்ற அற்ப நிலைக்கு அப்பால் செல்வதற்குச் சிங்களவர்களிடம் தாராள மனப்பான்மை, நியாய சிந்தை இன்னும் துளிர்க்கவில்லை,

எனவே தமிழர்கள் தமது ஆட்சி உரிமையையும், இறைமையையும் மீளப்பெறுவதற்கு போராடுவதைத் தவிர வேறு எந்த மார்க்கமும் இல்லை என்ற நிலை உறுதியாக உணர்த்தப்படுகிறது. அதனை உணர்த்துபவர்களும் பேரினவாத சேற்றில் மூழ்கி எழுந்துள்ள அனுருத்த போன்ற சிங்கள அரசியல் தலைவர்களே!

# மலையகப் பகுதியில் காணாமற்போன 29 தமிழர் பற்றி தகவல் இல்லை

கொழும்பு, ஜன. 20

ஊவா மாகாணத்தில் உள்ள மலையக மக்களில் 1988 முதல் 1993 வரையிலான காலப்பகுதிக்குள் காணாமற்போன 29 மலையக இளைஞர்கள் குறித்து இதுவரை தகவல் எதுவும் இல்லை என்று பதுளை மாவட்ட இ.தொ.கா. அரசியல் அமைப்பாளர் எம்.எஸ். முத்தையா ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காணமற் போயுள்ளவர்களில் மூவரைத்தவிர்ந்த ஏனையோர் திருமணம் செய்தவர்கள் என்றும் —

அவர்களது குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் — அவர் கேட்டுள்ளார். (இ-3)

## கூட்டம்

1996 ஆம் ஆண்டுக்குரிய முதலாம் அரையாண்டுக்கான மாவட்ட விலை நிர்ணயக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் நடைபெறும்.

இது சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களை மேற்படி கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா கேட்டுள்ளார்.

# யார் என்ன சொன்னாலும் யுத்தம் முடிவுக்கு வரும்

## அனுருத்த கூறுகிறார்

யார் என்ன சொன்னாலும் வடக்கு – கிழக்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும். அதன் பின்னர் அரசியல் தீர்வொன்றை வழங்கி நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தவேண்டும். இல்லையேல் மேலும் பல பிரபாகரன்கள் உருவாவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

ஜயபூமி காணி உறுதிகளை கையளிக்கும் வைபவத்தில் உரையாற்றிய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டிலே இன்று நிலவும் யுத்த நிலை நாட்டின் பொருளாதாரவளத்தின் பெரும் பகுதியை ஏப்பமிட்டு வருகிறது என்றும்—

போரை முடிவுக்கு கொண்டு வந்தால் நாட்டில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல ஒவ்வொரு அமைச்சுக்கும் மேலும் 20 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யமுடியும் என்றும்— அவர் மேலும் கூறினார். (இ-7)

# ராமராவ் ஆதரவாளர் நால்வர் தற்கொலை!

ஹைதராபாத் ஜன. 20

ஆந்திரப் பிரதேச முன்னாள் முதல்வர் என். டி. ராமராவின் மறைவையொட்டி நேற்று இரண்டாவது நாளாக ஆந்திரப் பிரதேசத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

என். டி. ராமராவ்வின் நெருங்கிய ஆதரவாளர்களான நால்வர் நேற்று தற்கொலைசெய்து கொண்டனர் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இவர்களில் ஒருவர் தீக்குளித்து இறந்துள்ளார்.

ராமராவ்வின் பூதவுடல் நேற்று பிற்பகல் மக்கள் அஞ்சலிக்காக ஹைதராபாத்தில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி ஸ்ரேடியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் அங்கிருந்து இறுதி ஊர்வலம் பூரண அரச மரியாதைகளுடன் நடைபெற்றது.

முன்னாள் பிரதமர்களான வி. பி. சிங், சந்திரசேகர் மற்றும் தமிழ் நாடு ஆளுநர் சென்னாரெட்டி உட்பட ஏராளமான பிரமுகர்கள் நேற்று ராமராவ்வின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (இ)

# மீனவரின் சைக்கிள்கள் ஷெல் வீச்சினால் சேதம்

வியாபாரிமூலை, ஜன. 20

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் வீச்சுக்களுக்கு தொண்டமனாறு கடலோரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் சைக்கிள்கள் இலக்காகின.

இதனால் ஐந்து சைக்கிள்கள் முற்றாக சேதமடைந்தன.

சம்பவதினம் காலைவேளையில், தமது சைக்கிள்களை கடற்கரையில் நிறுத்தி விட்டு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் பலாலியில் இருந்து இந்த ஷெல்கள் ஏவப்பட்டன. (இ-152)

# மட்டக்களப்புப் பகுதிக்கு ஐ. நா. அபிவிருத்திக் குழு

சாவகச்சேரி, ஜன. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளமக்களின் இன்றைய நிலை குறித்து ஆராய ஐ. நா. அபிவிருத்தித் திட்டக் குழு அங்கு செல்லவிருக்கிறது.

எதிர்வரும் 22ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ள இக் குழுவில் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட இலங்கை வதிவிடப் பிரதிநிதி அவரது உதவியாளர், மனித வள ஆலோசகர் ஆகியோர் அங்கம் வகிப்பர். (இ-3)

# படையினரின் சம்பளப் பணத்தை பாதுகாக்கவே வலிகாமத்தில் வங்கி

கொழும்பு, ஜன. 19

படையினர் ஆக்கிரமித்த யாழ்ப்பாணத்தில் கிவில்நிர்வாகத்தை கொண்டுவர பலாலி, காங்கேசன்துறையில் திறக்கப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் படையினர் தமது சம்பளத்தை வைப்பில் இட்டு பயன் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் அங்குள்ள படையினர் தமது சம்பளப் பணத்தை முகாம்களிலேயே தமது சூட்கேஸ்களில் வைப்பதாகவும்—

திடீரென அவர்கள் போர் முனைக்கு போகும்போதோ அல்லது திடீர் தாக்குதலின் போதோ பணத்தை இழக்கும் நிலை இருந்து வந்ததாகவும்—

தற்போது வங்கிக் கிளையில் பணத்தை வைப்பில் இடுவதால் பணம் பாதுகாக்கப்படுவதாகவும் — கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

20 — 01 — 1996

இரவு

★ 8-02 — நீங்கள் கேட்டவை
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

21 — 01 — 1996

காலை

★ 7. 02 — மாவீரர்வணக்கம்
★ 7-10 — களத்தில் மலர்ந்தவை
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — அறிவிப்புகள் — தொடர்ந்து 8-00 மணி வரை களத்தில் மலர்ந்தவை

# 2 படகுகளில் மீன்பிடிக்க சென்றோர் திரும்பவில்லை

தென்மராட்சி, ஜன. 20

நாவற்குளி கோவிலாக் கண்டி கடலில் மீன்பிடிக்கச் சென்றோர் மீது மண்டைதீவு முகாமிலிருந்து இரு விசைப் படகுகளில் வந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சம்பவதினம் இரு படகுகளில் சென்றோர் கரை திரும்பவில்லை என்றும் படகுகள் பற்றிய தகவலும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# யுத்த பகுதிக்கு வெளிநாட்டு வைத்தியர்கள்

கொழும்பு, ஜன. 20

யுத்தப் பகுதிகளில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறைப் பிரச்சினை, வெளிநாட்டு வைத்தியர்கள் மூலம் தீர்க்கப்படும் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளிட்டுள்ளது. (இ-3)

# ஹபரண நாளை வருகிறது

சாவகச்சேரி, ஜன. 20

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் 'ஹபரண'' கப்பலில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு ஒரு தொகுதி மருந்து வகைகளும் எடுத்து வரப்படுகின்றன.

திருகோணமலையில் இருந்து இன்று மாலை புறப்படும் இக் கப்பலில் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களுக்கான நிவாரணப்பொருள்களும் எடுத்து வரப்படும்.

இக்கப்பலில் மா ஏற்றிவரப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், மா எடுத்து வரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது

சர்வதேச தொண்டர் அமைப்பு பிரதிநிதிகள் சிலரும் இக்கப்பலில் வரவிருக்கின்றனர். (இ-3-15-173)

# லங்கா கல்யாணி நேற்று பருத்தித்துறை வந்தது

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் ''லங்கா கல்யாணி'' கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

அரிசி, மா, சீனி, பருப்பு, பயறு ஆகியவை இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

அதேவேளை — மற்றொரு தொகுதி நிவாரணப் பொருள்களுடன் வந்துள்ள ''லங்கா முடித'' கப்பல் திருகோணமலையில் தரித்து நிற்பதாகவும் —

''ஹபரண'' கப்பல் பொருள்களை இறக்கிவிட்டுத் திரும்பியதும் அக்கப்பல் பருத்தித்துறையை [illegible] என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-15-3-173)

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 21 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

★ சண்முகம் ராஜரட்ணம் (PHI)— சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டை.

★ திரு. தம்பிப்பிள்ளை ஐயாத்துரை — 18, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.

★ துரையப்பா தனபாலசிங்கம் — 13, 3 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ பொன்னையா இளையதம்பி — 31/05, பண்டாரக்குளம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

★ வல்லிபுரம் கந்தையா—40/01, கலைமகள் வீதி, அரியாலை.

★ செல்வி இளையாங்கனி (அன்னப்பிள்ளை) — மே.பா. ஜெ. சின்னத்துரை, 27/10 முதலாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சத்தியானந்தசிவம் கனகம்

[இளைப்பாறிய ஆசிரியை]

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், யாழ் ஈச்சமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சத்தியானந்தசிவம் கனகம் சாவகச்சேரியில் காலமானார்.

இவர் க. சத்தியானந்தசிவம் (சச்சி மாஸ்ரர்) அவர்களின் அன்பு மனைவியும், ச. தவசீலன் (தவம் ஸ்ரோர்ஸ்) லயன் தவச்செல்வன் (வடிசாலை முகாமையாளர் திக்கம், மதிப்பீட்டாளர், வட. மா. ப. தெ. வ. கூ. சங்கங்களின் சமாசம்) ச. தவநேசன் (யா. பல. நோ. கூட்டுறவு சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், த. மாலினி (சித்த வைத்தியர்) த. இராசலட்சுமி (இலங்கை வங்கி பருத்தித்துறை) த. ஜெயந்தி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியும் சுகிர்தா, சுகல்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20-01-1996) சனிக்கிழமை மாலை 3. 00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சச்சி மாஸ்ரர்
இல: 40 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி
திரு. கா, ஞானச்சந்திரன்
(சயிக்கிள் கடை உரிமையாளர்)
''அன்ரனி லொட்ஜ்''
ஸ்ரேசன் ஒழுங்கை
(சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு பக்கமாக,
உள்ள ஒழுங்கை)
சாவகச்சேரி. (40207)

## K. S. பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த சண்முகம்பிள்ளை பாலசுப்பிரமணியம் 19- 01- 96 அன்று காலமாகிவிட்டார்.

இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், சந்திர கௌரி, சுதந்திரப்பிரபா, ராஜ்ஆனந், அனுராதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், முத்துவேற்பிள்ளை (Rtd. S. R. D), கந்தசாமி (இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்கள S. S. O.), குமாரசுவாமி (P. H. I. வவுனியா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பூரணம்பிள்ளை, காலஞ்சென்ற பரமசாமி, மற்றும் சிவகுமாரன், சத்தியா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19- 01- 96 அன்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றது என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
மு. கேதீஸ்வரன்
(பெறாமகன்)

தற்போதைய முகவரி:
27, முதலாம் ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (39981)

# இந்திய புலமைப் பரிசில்கள் விண்ணப்பம் அனுப்பலாம்

சாவகச்சேரி, ஜன. 20

இந்தியாவில் பட்டதாரி, பட்டப் பின்படிப்பு ஆகியவற்றைப் பயில்வதற்கான இவ் வருடத்துக்கான புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையை ஒரே தடவையில் மூன்று சிறப்புச் சித்திகளுடன் சித்தியடைந்த 19 வயதுக்கும் 22 வயதுக்கும் உட்பட்டவர்கள் பட்டதாரி புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம். இவர்கள் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையில் ஆங்கிலத்தில் சிறப்புச் சித்தி பெற்றிருப்பது அவசியம்.

பட்டப் பின்படிப்பு புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிப்போர் பட்டதாரிகளாகவும், 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் முப்பதாம் திகதியாகும்.

விண்ணப்பங்கள், இல. 18, வாட் பிளேஸ் கொழும்பு 7 இல் உள்ள கல்வி, உயர்கல்வி அமைச்சின் வெளிநாட்டு முகவர்கள் பிரிவுக்கு அனுப்பப்படவேண்டும்.

விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் —

சாவகச்சேரி நவீன சந்தை மேல் மாடியில் உள்ள உதயன் கிளை நிலையத்திலும் —

பருத்தித்துறை, பழைய பஸ் நிலைய சதுக்கத்தில் உள்ள உதயன் கிளை நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

## ஒன்றுகூடல்

பருத்தித்துறை பிரதேச ஊர்காப்பு கழக இணைப்பாளர், உறுப்பினர், சனசமூக நிலைய தலைவர், செயலாளர் ஆகியோருக்கான ஒன்றுகூடல் இன்று சனி பிற்பகல் 3–00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

அனைவரையும் ஒன்று கூடுமாறு பருத்தித்துறை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (இ)

---

கிழக்கு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் எதிர் கொள்ளவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

கடந்த மாதமும் மட்டக்களப்பு — அம்பாறையில் மேற்கொள்ளப்பட்ட இதே போன்ற நடவடிக்கை புலிகள் எவரையும் எதிர்கொள்ளாததால் தோல்வியில் முடிந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## அதிபர் கூட்டம்

தென்மராட்சி, ஜன. 20

சங்கானை கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 .00 மணிக்கு வலயம் – 2 இன் பணிமனை அமைந்துள்ள கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நடைபெறும்.

அதிபர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு கோட்டக்கல்வி அதிகாரியினால் கோரப்பட்டுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)

தெல்லிப்பழை பூத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் புலோலியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ச. சுப்பிரமணியம் நேற்று (19–1-96) காலமானார்.

இவர் அன்னத்தின் அன்புக் கணவரும், பழனி தாசன் (தபால் ஊழியர், தெல்லிப்பழை), பத்மநாதன் (ஜேர்மனி), பத்மாவதி, பராசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற செல்வலிங்கம் (சிறாப்பர், க. தி). சாந்தி, பொ. தவராசா, ப. இரஞ்சி[ஜேர்மனி] ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [20-1-96] சனிக்கிழமை காலை 8. 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
சு. பழனிதாசன

செட்டித்தெரு.
பருத்தித்துறை. (40087)

## சந்தியாப்பிள்ளை சவரிமுத்து

(ஓய்வு பெற்ற யாழ். ஆயர் இல்ல ஊழியர்)
(சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், தற்போது மிருசுவிலில் வசித்தவருமாகிய ச. சவரிமுத்து நேற்று (19–1–96) காலமானார். இவர் அக்கினேசின் அன்புக் கணவரும், அல்பிறெட் யோசவ் [கொழும்பு], அலோஷியஸ் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர் பண்டத்தரிப்பு), யோன்ஓவ் ஆர்க் [கனடா], வுலோறிமன்ட் [கனடா], ஜெம்மா யஸ்மின் [ராணி], அருட்திரு பொன்கலன் O. M. I. [அமெரிக்கா], பற்றிமாராசா [ஓய்வு பெற்ற தபால் ஊழியர் பண்டத்தரிப்பு], ஜெகநாதன் [பிரான்ஸ்], அன்ரன், இமெல்டா ஜொய்சி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை [21-1–96] ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3. 00 மணியளவில் நல்லடக்கத்துக்காக மிருசுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. அலோஷியஸ்
(மகன்)

சூசானா இல்லம்,
மிருசுவில். [40210]

## பேரம்பலம் பரமேஸ்வரநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பேரம்பலம் பரமேஸ்வரநாதன் 19- 01- 1996 இல் சிவபதமடைந்தார்.

இவர் திருமதி தேவமலரின் அன்புக் கணவரும், செல்வி பாமதி (வசாவிளான் மகா வித்தியாலய ஆசிரியை), ராதா, ரவீந்திரன் (மஸ்கன்ஸ் ஸ்தாபனம், கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், வில்லிமலர் விசுவலிங்கம், டாக்டர் சொர்ணகாந்தி, மலர் துரைராஜசிங்கம், தவமலர் விவேகானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20-01- 1996) பிற்பகல் 2. 00 மணியளவில் புலோலி தெற்கிலுள்ள ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பாமதி
(மகள் - ஆசிரியை)

விலாசம்:
திரு சி. சத்தியமூர்த்தி,
உப- தபால்கந்தோர் அருகில்,
வல்லிபுரக் குறிச்சி. (40211)


# யாழ் சைனீஸ் உணவகம்

(YARL CHAINESE) சாவகச்சேரி

உங்கள் தரமான, சுத்தமான உணவுத் தேவைகளுக்கும் மற்றும்
சிற்றுண்டி வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம் (யாழ் சைனீஸ் உணவகம்)

★ கோழி புரியாணி வகைகள் ★ பிரைட் ரைஸ் (Fried Rice)
★ நூடில்ஸ் ★ சான்விச் ரோஸ்டர் ★ கட்லட் ★ பற்றீஸ்
★ ரோல்ஸ் ★ கேக் வகைகள் ★ நெஸ்கோப்பி
★ மைலோ ★ மைலோ ரீ

மற்றும் தரமான் உணவு வகைகள்.
மேலதிக தேவைக்கான ஓடர்கள் முன்கூட்டியே
பதிவுசெய்து குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## யாழ் சைனீஸ் உணவகம்

கண்டி வீதி, சாவகச்சேரி.
(சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் (A.G.A.) காரியாலயம் முன்பாக)
(39979)



வாடிக்கையாளர்களின் நன்மை கருதி

# உதயனின் சாவகச்சேரி பருத்தித்துறை பணிமனைகள்

காலை 8-00 மணி முதல் இரவு 9-00 மணி வரை திறந்திருக்கும்

9, நவீன சந்தை மேல் மாடி,
சாவகச்சேரி.

பழைய பஸ் நிலையச் சதுக்கம்,
பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 20-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.